# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2018

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

நேரம்: 2.30 மணி

## வணிகவியல்

மதிப்பெண்கள்: 90

அறிவுரை : 1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பிரிவு - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து, குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

20 x 1 = 20

1. தனி உரிமையாளரின் பயனாக இருக்க எது குறிப்பிடப்படுகிறது?
   a) சிறு முதல் b) அவசர முடிவு
   c) வரையறு முதல் d) மேலாண்மை திறமைக்கும் எல்லை
2. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு
   a) தனி வணிகர் b) கூட்டாண்மை
   c) கூட்டு பங்கு நிறுமம் d) இந்து கூட்டு குடும்பம்
3. தனியாள் வணிகம் துவங்க
   a) குறைந்தது இரு நபர்கள் தேவை b) குறைந்தது ஏழு நபர்கள் தேவை
   c) ஒரு நபர் மட்டும் தேவை d) குறைந்தது பத்து நபர்கள் தேவை
4. கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை
   a) 4 b) 10 c) 2 d) 5
5. கூட்டாண்மை பதிவு
   a) கட்டாயம் b) விருப்பத்தின் பேரில்
   c) அவசியமில்லை d) மேற்கூறிய எதுவுமில்லை
6. கூட்டாண்மையில் உள்ள அனைவரையும் ஒட்டுமொத்தமாக ________ என்றழைக்கிறோம்.
   a) கூட்டாளிகள் b) நிறுவனம் c) நிறுவனப் பெயர் d) நிறுமம்
7. பொது வரையறை நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை
   a) 2 b) 3 c) 7 d) 10
8. ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் ________.
   a) பட்டய நிறுமங்கள் b) சட்டமுறை நிறுமங்கள்
   c) பதிவுற்ற நிறுமங்கள் d) அரசு நிறுமங்கள்
9. தனி வரையறு நிறுமத்தில் குறைந்தது ________ இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.
   a) 2 b) 3 c) 5 d) 4
10. கீழ்க்கண்ட நிறுமங்களுள் எது சட்டமுறைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்?
    a) சட்டமுறை நிறுமங்கள் b) தனிவரையறை நிறுமங்கள்
    c) பொதுவரையறை நிறுமங்கள் d) பட்டய சாசன நிறுமங்கள்
11. நிறுமச் செயலர் ஒருவர் ________ தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
    a) அரசால் b) இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால்
    c) இயக்குநர் அவையால்
    d) ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்குநர்களால் நியமிக்கப்படுகிறார்.
12. தீர்மானம் ________ வகைகளாகப் பிரிக்கலாம்.
    a) 4 b) 2 c) 3 d) 5
13. பின்னோக்கிய மனப்பான்மை கொண்ட ஊகவணிகர் ________
    a) கலைமான் b) கரடி c) காளை d) முடவாத்து
14. பங்கு மாற்றகம் இதற்கான ஒரு இடமாகும்.
    a) ஒரு பத்திரத்தை மற்றொரு பத்திரமாக மாற்றுவது b) நிதிப் பத்திரங்களை வாங்கி விற்பது
    c) புதுப்பங்குகளை வெளியிடுவது d) சரக்குகளை வாங்கி விற்பது
15. போல்ட் என்பது மும்பை பங்கு சந்தையில் மார்ச் ________ முதல் நடைமுறையில் உள்ள ஒரு வணிகச் செயல்பாடாகும்.
    a) 1995 b) 1997 c) 1980 d) 1985
16. கூட்டுறவில் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை
    a) 2 b) 7 c) 10 d) 25
17. பங்காதாயம், கூட்டுறவில் ________ அடிப்படையில் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.
    a) பங்கு முதல் b) பங்குகள் வாங்கிய எண்ணிக்கையில்
    c) ஆதரவின் அடிப்படையில் d) இவை எதுவும் இல்லை
18. கூட்டுறவுச் சங்கத்தின் அடிப்படை நோக்கமானது
    a) இலாபம் ஈட்டுவது
    b) உறுப்பினர்களின் நன்மைக்கான இன்றியமையாத சேவையை நிர்வாகம் செய்வது
    c) சமுதாயத்திற்கு இன்றியமையாத சேவையை செய்தல்
    d) சமுதாயத்திற்குப் போதுமான தரமான பொருட்களை தருவது

19. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாகக் கருதப்படும் அமைப்பு
   a) துறைவாரி அமைப்பாகும்
   b) பொதுக் கழகமாகும்
   c) அரசு நிறுமம்
   d) மேற்கூறிய எதுவுமில்லை
20. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது
   a) துறைவாரி அமைப்பு
   b) அரசு நிறுமம்
   c) பொதுக் கழகம்
   d) வாரிய அமைப்பு

## பிரிவு - II

**குறிப்பு : எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண்.21-ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்:** 7 x 2 = 14

21. ஊர்விக் மற்றும் ஹண்ட் அவர்களின் அமைப்பிற்கான வரைவிலக்கணம் தருக.
22. கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளை கூறுக.
23. உழையா கூட்டாளி என்பவர் யார்?
24. அரசு நிறுமத்தின் இயல்புகளுள் ஒன்றான மேலாண்மை குறித்து எழுதுக.
25. சட்டமுறை நிறுமம் என்றால் என்ன?
26. பகராள் என்றால் என்ன?
27. மேலாண்மை இயக்குநர் என்பவர் யார்?
28. பத்திரம் என்றால் என்ன?
29. கூட்டுறவு பண்டகசாலை என்றால் என்ன?
30. அரசு தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம்?

## பிரிவு - III

**குறிப்பு : எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண்.31-ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்:** 7 x 3 = 21

31. முரண்தடை கூட்டாளி என்பவர் யார்?
32. தனி நபர் வணிகத்தின் குணாதிசயங்களை பட்டியலிடுக.
33. கூட்டாண்மை நிறுவனத்தில் இளவரின் நிலை பற்றி விவரிக்கவும்.
34. பிடிப்பு, துணை நிறுமங்கள் பற்றி விளக்குக.
35. உள்நாட்டு நிறுமம் என்றால் என்ன?
36. ஒரு நிறுமத்தில் இயக்குநர் வகிக்கும் நிலைகளைக் கூறுக.
37. உட்கிடை ஆணையுரிமை பெற்ற ஒவ்வொரு கூட்டாளியும் நிறைவேற்ற வேண்டிய பணிகளுள் எவையேனும் ஆறினை எழுதுக.
38. செபியின் செயல்பாடுகள் பற்றி விவரி.
39. கூட்டுறவு அமைக்க பின்பற்ற வேண்டிய ஏதேனும் மூன்று முறைகளை விளக்குக.
40. துறைவாரி அமைப்பின் ஏதேனும் மூன்று இயல்புகளை விவரி.

## பிரிவு - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 7 x 5 = 35

41. பல்வேறு வகையான வணிக அமைப்புகளை பட்டியலிட்டு அரசு நிறுமத்தினை விளக்குக.

*(அல்லது)*

நிகழ்ச்சிக் குறிப்பு என்றால் என்ன? நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் காணப்பெற வேண்டியவை யாவை?

42. சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கினை (ஏதேனும் 5) விரிவாக விவரி.

*(அல்லது)*

கூட்டாண்மை நிறுவனத்தின் நிறைகள் ஏதேனும் ஐந்தினைப் பற்றி விரிவாக விளக்குக.

43. பங்குகட்டும், கடனீட்டுப் பத்திரங்கட்டும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்து பற்றி விரிவாக விவரி.

*(அல்லது)*

செபியின் பணிகள் யாவை? (ஏதேனும் 10)-யை விவரி.

44. விளக்க குறிப்பு தருக:
   a) இயக்குநர் குழுக் கூட்டங்கள்
   b) கடனீட்டுப் பத்திரதாரர் கூட்டம்
   c) கடனாளர் கூட்டங்கள் *(அல்லது)*

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் பற்றி விவரி.

45. ஒரு நிறுமத்திற்கும் ஒரு கூட்டாண்மைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

*(அல்லது)*

ஒரு நிறுமச் செயலின் கடமைகளை விவரி.

46. பங்கு மாற்றகத்தால் நிறுமத்திற்கு ஏற்படும் நன்மைகள் யாவை?

*(அல்லது)*

கூட்டுறவு அமைப்பின் குறைபாடுகள் விவரி. (ஏதேனும் 5 மட்டும்)

47. துறைவாரி அமைப்பின் நிறைகள் யாவை? (ஏதேனும் 5 மட்டும்)

*(அல்லது)*

முன்னுரிமை பங்குகளின் ஏதேனும் ஐந்து வகையினை விளக்குக.

******